DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No.187/2017 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W.8<br>Defence |

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : வைத்திலிங்கம் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | ஜாதி | : | |
| கிராமம் | : | இனம் | : | |
| தாலூக்கா | : | வயது | : | |
| Mail ID | : | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 05.06.2023.

**(எதிரி ஆஜர். முதல் விசாரணை ):**

நான் ஆய்வாளராக பணிபுரிந்து 31.07.2016 அன்று பணி ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 02.09.2014 ம் தேதி உடுமலைப்பேட்டை காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளராக பணியில் இருந்த போது வழக்குக் கோப்பை பெற்று சென்னை தடய அறிவியல் துறையில் இருந்து அறிக்கை பெற்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன். (அந்த தடய அறிவியல் ஆய்வறிக்கை ஏற்கனவே ஆக குறியீடு செய்யப்படுகிறது). பின்னிட்டு சாட்சிகள் 1 முதல் 8 வரையானவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து எதிரி மீது இதச பிரிவு 468, 471, 420 ன் கீழ் 30.11.2014 ம் தேதி அன்று குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) அ.சா.1 எந்த தேதியில் புகார் கொடுத்தார் என்றால் 31.08.2012 ம் தேதி உடுமலைப்பேட்டை காவல் நிலையத்தில் நேரில் ஆஜராகி புகார் கொடுத்தார். பட்டியல் சாட்சிகளை அழைப்பாணை அனுப்பி விசாரணை செய்தேனா என்றால் எனக்கு முன்னால் விசாரணை செய்த ஆய்வாளர் விசாரணை செய்திருந்ததால் நான் மீண்டும் விசாரிக்கவில்லை. எதிரி என்

முன்னிலையில் மாதிரி கையொப்பம் எதுவும் போட்டு காண்பிக்கவில்லை. தடய அறிவியல் துறைக்கு நீதிமன்றத்திடம் அனுமதி பெற்று கையெழுத்து பரிசோதனைக்கு அனுப்பினேனா என்றால் எனக்கு முன்பு விசாரணை செய்த ஆய்வாளர் வேண்டுகோள் கடிதம் கொடுத்து தடய அறிவியல் துறைக்கு ஆவணத்தை அனுப்பியுள்ளார்.

(2) புகாரில் குறிப்பிடப்பட்டுள்ள மின் இணைப்பு எண். எந்த மின் வாரிய பகுதிக்கு உட்பட்டது என்றால் பூலாங்கிணறு மின் வாரிய பகுதிக்கு உட்பட்டது ஆகும். அ.சா.1 யாருக்கு வழக்கு சம்பவ இடத்தை கிரையம் செய்து கொடுத்தார் என்றால் ஸ்ரீதர் என்பவருக்கு பொது அதிகார பத்திரம் பதிவு செய்யப்பட்டு கொடுக்கப்பட்டுள்ளது. புகார் கொடுத்ததும் சம்பவ இடத்திற்கு சென்று அங்கிருந்த மின் இணைப்பு மற்ற அம்சங்களை பார்த்தேனா என்றால் இல்லை. எதிரியை நான் விசாரணை செய்யவில்லை. இந்த வழக்கில் யார், யாரை விசாரணை செய்தேன் என்றால் ஏற்கனவே முந்தைய விசாரணை அதிகாரி விசாரணை செய்யததால் நான் விசாரணை செய்யவில்லை.

(3) இந்த வழக்கில் நான் புலன் விசாரணை எதுவும் செய்யாமல் இறுதி அறிக்கை மட்டும் தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் இந்த வழக்கில் உரிய வகையில் விசாரணை எதுவும் செய்யாமல் தயார் செய்யப்பட்ட ஆவணங்களின் மூலம் எதிரி மீது பொய்யாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/-Vijayakumar,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.